**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

## C.C.No. 322/2013 P.W. 4/L.W.4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு.ரோபாத் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 04.02.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1, 2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். 3 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கடல் தொழில் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியாது. அ.சா1, சாட்சி ஆன்றணி மற்றும் சாட்சி 3 ஆகியோர்களை எனக்குத் தெரியாது. வழக்குசம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 25.12.2009 ம் தேதி இரவு 23.00 மணிக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அ.சா1 ஐ தகாத வார்த்தைகள் பேசினார்கள் என்றும் சாட்சி 2, சாட்சி 3 மற்றும் சாட்சி 5, காயம் ஏற்படுத்தினார் என்றும், அனைவரையும் பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்சமயம்

நான் சமாதானமாகிவிட்டதால் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.